28 JAN 1999

Registered as a News Paper


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 தை 14 வியாழக்கிழமை (28-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:53


# 5 மாகாணசபைகளின் தேர்தல்கள் ஒத்திவைப்பு அரசமைப்புக்கு முரண்!

## உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஜனவரி 28

தெற்கில் ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் ஜனாதிபதி கடந்த வருடம் ஒத்திவைத்தமை அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

அந்த மாகாண சபைகளுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடக்க வசதியாக தேர்தல் திகதியை நான்கு கிழமைகளுக்குள் தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளது.

தெற்கில் உள்ள சப்பிரகமுவ, ஊவா, மேல், தென், வடமத்தி ஆகிய மாகாணங்களின் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

தேர்தல்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப் போதிய பாதுகாப்புப் படையினர் இல்லை என்ற காரணத்தைக் காட்டி அவசரகால விதிகளின் கீழ் ஜனாதிபதி தேர்தல்களை ஒத்தி வைத்தார்.

இந்த ஒத்திவைப்பை எதிர்த்து சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த வருண கருணதிலக்க, சுனந்ததேசப்பிரியா ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

தேர்தலை ஒத்தி வைத்த தன் மூலம் மக்களின் கருத்து வெளியிடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது— என்றும்

தேர்தல் ஒத்திவைப்பு அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என்றும்—அவர்கள் தமது மனுவில் தெரிவித்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ்.டி. சில்வா, நீதியரசர்களான மார்க் பெர்னாண்டோ, டி. பி. எஸ். குணசேகர ஆகியோர் தமது தீர்ப்பை நேற்று வெளியிட்டனர்.

''தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். அத்துடன் அரசமைப்புக்கு முரணானது. மக்களின் கருத்து வெளியிடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே தேர்தலை பின்போட்டது பிழையானது என்று அவர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## சதீஸின் இறுதிச் சடங்கு இன்று வவுனியாவில்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மாவட்டப் பொறுப்பாளர் சதீஸின் இறுதிக் கிரியைகள் இன்று வவுனியாவில் நடைபெறவிருக்கின்றன.

வவுனியாவில் அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், வவுனியா நகரசபைத் தலைவர் சி. லிங்கநாதன் ஆகியோர் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

இன்று காலை அவரது பூதவுடல் புளொட் அமைப்பினரால் பொறுப்பேற்கப்பட்டு, அவர்களது அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

அதைத் தொடர்ந்து கோயில் குளம் மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இறுதிக் கிரியைகள் தொடர்பான நிகழ்ச்சிகளை வானம்பாடி சேவை நேரடியாக அஞ்சல் செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## வெள்ளைக் கொடியுடன் வந்தவர் வழியில் மரணம்

### பிள்ளைகள் அகதி முகாமில்

வவுனியா, ஜன. 28

வறுமையின் கொடுமை தாங்கமுடியாது தனது ஐந்து பிள்ளைகளுடன் வெள்ளைக் கொடியைப்பிடித்துக் கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர் இடைவழியில் உயிரிழந்தார். அவரின் பிள்ளைகள் அநாதரவான நிலையில் வவுனியா முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டையில் குண்டு மீட்பு!

கொழும்பு, ஜன. 28

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் உள்ள மின் மாற்றி ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று நேற்று முன்தினம் இரவு 12-30 மணியளவில் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

நேரம் குறித்து வெடிக்கக் கூடியதாக அந்தக் குண்டு இருந்ததாகத் தெரிவிக்கப்

( 10ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகள் வரவேற்பு

கொழும்பு, ஜன. 28

தெற்கு மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைத்த அரசின் அறிவிப்பு தவறானது என்று உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பை எதிர்க் கட்சிகள் வரவேற்றுள்ளன.

''வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு'' என்று ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

''உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து ஒரே நாளில் ஐந்து சபைகளுக்கும் தேர்தலை நடத்த முன்வரவேண்டும்'' என்று ஜே.வி.பி. செயலாளர் விமல் வீரவன்னி கேட்டுள்ளார்.

(இ-3-10)

## தனது பாதுகாப்புக் கருதி புளொட் பதில் நடவடிக்கை எடுக்கும்

### மாணிக்கதாசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

எமது அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் எஸ். சதீஸ் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து எம்மைப் பாதுகாக்கத்தக்க வகையில் பதில் நடவடிக்கை எடுப்போம். அந்த நடவடிக்கையை ஆரம்பித்து விட்டோம்.

இப்படி புளொட் அமைப்பின் உபதலைவர் என். மாணிக்கதாசன் தெரிவித்தார்.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ. சதீஸ் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிவை ரத்துச் செய்யும் கோரிக்கை அரசால் நிராகரிப்பு

கொழும்பு, ஜன, 28

வடமேல் மாகாண சபைத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறாததால், தேர்தல் முடிவை ரத்துச் செய்து மீண்டும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தேர்தலைக் கண்காணித்த சுயாதீன கண்காணிப்புக் குழுக்கள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்தத் தேர்தலில் இடம் பெற்ற வன்முறைகள் மற்றும் மோசடிகளில் பொது மக்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## விமானச் சேவை நாளை ஆரம்பம்

### சிவில் நிர்வாகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

பலாலிக்கும் — இரத்மலானைக்கும் இடையிலான ஹெலிடூர்ஸின் பயணிகள் விமானசேவை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

விமானப் பயணம் மேற்கொள்ள கடந்த 25 ஆம்

( 10ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு

## ஆமர் வீதிப்பகுதியில் 200 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஜன. 28

கொழும்பு ஆமர்வீதிப் பகுதியில் நேற்று அதிகாலை பொலீஸாரும், படையினரும் மேற்கொண்ட திடீர் தேடுதலில் 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

அப்பகுதியில் உள்ள வீடுகள், கடைகள் யாவும் ஒரே

(10ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் தேடுதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 28

வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் படையினர் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தினர்.

வடமராட்சியில் வியாபாரி மூலை, ஓடக்கரை, பருத்தித்

(10ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்களை அகற்ற படைத் தரப்பு இணக்கம்

கோண்டாவில்—கொக்குவில் பகுதியூடாகச் செல்லும் காவலரண்களை அகற்ற 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் மாரம்பே நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஈ. பி. டி. பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 1ST in Com., G.A.Q 2000

## யாழ், பேராதனை (வெளிவாரி)

★ மேற்குறிப்பிட்ட பாட நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ A/L இல் 3 பாடங்களில் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப்பாட நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

★ **இதற்கான விரிவுரைகள் ஆரம்பம் 30-01-99**
காலை 8 மணி

விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு
**S. அருள்நங்கை**

**புதிய உயர் கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

(62470)

---

# இதய அஞ்சலி

மானிப்பாய் மெமோறியல் அன்னையின் பெருமைமிகு பழைய மாணவனும் மருதனார்மடம் கிறிஸ்தவ சேவாச்சிரமத்தின் ஊடாக இன, மத பேதமின்றி இறைபணி ஆற்றியவருமான

**வண. சேவக். அல்பிறட் சாம் அடிகள்**

மறுமைக்குள் பிரவேசித்தமையறிந்து ஆறாத்துயரடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது ஆதரவுக் கர நிழலில் வாழ்ந்தவர்களோடு துயரதனைப் பகிர்ந்து கொள்கிறோம்.


மெமோறியல் சமூகத்தின் இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.**

(62541)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



## தங்கராசா விமலேஸ்வரன்

**(சாவகச்சேரி அஞ்சலக சேவகர்)**

| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 10–06–1967 | 16–12–1998 |

**(திதி: 29 — 01 — 1999)**

விளம்பிடு வெகுதானிய வாண்டுநல் மார்கழியில் வளம்படு மபரபக்கச் சதுர்த்தசியோ - உளம்படு உத்தமன் விமலேஸ்வரப் பேராளன் புவிவிட்டே அத்தனடி சேர்ந்ததிதி செப்பு.

எனது மகன் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரது இல்லத்தில் (29—01—1999) வெள்ளி காலை 11. 00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

**பெற்றோர்,**
**சகோதர சகோதரர்கள்.**

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(62542)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## புதிய மாணவர்கள் பதிவு செய்சல் 1998 / 99

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு கற்கை நெறிகளுக்கு 1998 / 99 கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டோர் தங்கள் பதிவைப் பின்வரும் திகதிகளில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

1) வர்த்தகம் / முகாமைத்துவம் — 10-02-1999
2) பௌதிக விஞ்ஞானம்/விவசாயம்— 11-02-1999
3) உயிரியல் விஞ்ஞானம் / மருத்துவம் — 12-02-1999

பதிவு செய்யும் பொழுது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. பூரணப்படுத்தப்பட்ட பதிவு விண்ணப்பப்படிவம்.
ஆ. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட அனுமதிக்கடிதம்.
இ. பிறப்புச்சான்றிதழ் (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்)
ஈ. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்)
உ. போட்டோ - 8 (கறுப்பு, வெள்ளை, அளவு 2 $2\frac{1}{2}$)
ஊ. தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி
எ. க. பொ. த. (உயர் தரம்) பெறுபேறு (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்)
ஏ. கட்டணம்;-

| | |
| --- | --- |
| விஞ்ஞானபீடம் | - 335/- |
| மருத்துவபீடம் | - 350/- |
| விவசாயபீடம் | - 275/- |
| கலைப்பீடம் | - 175/- |

(புவியியலை ஒரு பாடமாகக் கற்க விரும்புவோர் ரூ. 100 மேலதிகமாக செலுத்துதல் வேண்டும்).

தபால் மூலம் பதிவு செய்யவிரும்புவோர் ரூ3/50 முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட கடித உறையைத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு அனுப்பி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூர்த்தி செய்து கையொப்பததைச் சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தி, உரிய கட்டணத்தை நிதியாளர், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் என்ற பெயரில் எடுத்த காசுக்கட்டளையுடன், உரிய ஆவணங்களையும் சேர்த்து 15-02-1999 -க்கு முன் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கலை கற்கை நெறிக்கான மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கிடைக்கப்பெற்றதும் பதிவுக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**பதிவாளர்,**

(சி/6287)

---

# இதய அஞ்சலி

எமது சக ஆசிரியை
செல்வி வேணி அவர்களின்
பாசமிகு தந்தையார்

## வே. சின்னத்தம்பி

(இளைப்பாறிய முன்னாள் ஆசிரியர், யா/மட்டுவில் வடக்கு, அ. த. க. பாடசாலை)

அவர்கள் 25-01-99 அன்று கண்டியில் இறைபதம் எய்தியமையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பா. அபி. சபை ,**
யா/மட்டுவில் வடக்கு,
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

(62540)

---

# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, **யாழ்ப்பாணம்.**

## வெளிவாரி பட்டப்படிப்புகள்

B. A (பேராதனை) - 1999

B. A PART II ]
B. Com. PART II ] யாழ். - 1999

( பொருளியல்: S. வரதராஜன் )

ஆரம்பம் - 30 — 1 — 99 சனி 3. 00 மணி

(62547)

---

# வெளிவந்து விட்டது!

## சிலப்பதிகாரம் கானல்வரி கடலாடு காதை

(உரைக் குறிப்புடன்)

## கம்பராமாயணம் வாலிவதைப்படலம்

(அரும் பொருள் அகராதியுடன்)

திருமதி எஸ். சிவலிங்கராஜா
B. A. Hons Dip in Ed.

விலை 40/-
(G. A. Q. நுண்கலைத்துறை மாணவர்களுக்கு ஏற்றது)

கூட்டுறவுப் பரிசோதகர்

## போட்டிப் பரீட்சை 1998

பொது அறிவு

தொகுப்பு:
K. T. பிரபாகரன்
(B. A. P. G. Dip in Public Adam.

விலை 40/-

வெளியீடு-
பட்டப்படிப்புகள் கல்லூரி
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(மக்கள் வங்கிக்கு அருகில்)

(சி/6289)

---

# பொது அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகர சபை

எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் வியாபார நிலையங்கள், உயர் தொழில் நிலையங்கள் யாவும் **1999** ஆம் ஆண்டுக்கான உரிமக்கட்டணங்களையும் வியாபார வரிகளையும் **01-04-1999** ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி உரிய வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெற்று மாநகர சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247ஆம் பிரிவினதும் அதன் உப பிரிவுகளினதும் சார்பாக கட்டணம், வரி மற்றும் தேவையான தகவல்களை நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்
**மாநகர ஆணையாளர்**

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
21-01-1999

குறிப்பு:

1. வியாபாரங்களை புதிதாக ஆரம்பிப்பவர்கள் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு உரிய படிவத்தில் விண்ணப்பித்து வியாபார அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. வியாபார நிலையங்கள் மூடும் போதும் அதுபற்றி மாநகர சபைக்கு அறிவிக்க வேண்டும்.

(சி/6290)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# கொலம்பியாவில் பூமி அதிர்வில் 2,000 பேர் பலி

பொகோடா, ஜனவரி 28

**கோப்பிப் பயிர்ச் செய்கைக்குப் பெயர் பெற்ற மத்திய கொலம்பியாவில் திங்கட்கிழமை நேர்ந்த பாரிய பூமி அதிர்வினால் அங்கு மனிதப் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.**

**2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானதாகவும், பல ஆயிரக் கணக்கானோர் காயமடைந்ததாகவும் நூற்றுக் கணக்கானோர் காணாமற்போயுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.**

ரிச்டர் அளவில் 6.05 எனப் பதிவான இந்தப் பூமி அதிர்வு மத்திய கொலம்பியாவில் பலத்த சேதங்களைப் பாரிய அளவில் ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

கொலம்பியாவின் பிராந்தியத் தலைநகரமான ஆர்மேனியா மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தீஸ் மலைத் தொடரை அண்டி அமைந்துள்ள 5 மாகாணங்களில் 20 நகரங்களும், பல பட்டினங்களும் சேதமடைந்துள்ளன.

முதலில் வெளியான செய்திகள் சுமார் 300 பேர் உயிரிழந்ததாகவே தெரிவித்தன. ஆனால் இந்த எண்ணிக்கை பின்னர் கிடுகிடுவென அதிகரித்து நேற்று இச் செய்தி அச்சுக்குப் போன போது 3 ஆயிரத்தை எட்டி இருந்தது.

கொலம்பிய அதிபர் அந்திரேஸ் பஸ்ரானா தனது உத்தியோக பூர்வ வைபவங்களை நிறுத்திவிட்டுப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார்.

சேதமடைந்த கட்டடங்களில் உடைமைகள் களவாடப்படுவதைத் தடுப்பதற்காக சில நகரங்களில் இரவு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

## கல்லறைகளை விட்டு வெளியேறிய எலும்புகள்!

ஆர்மேனியா, ஜன. 28

மத்திய கொலம்பியாவில் பூகம்பம் தாக்கிய சில இடங்களில் மயானங்களில் இருந்த கல்லறைகளும் தப்பவில்லை.

கல்லறைகளில் இருந்து எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் வெளியே கிளம்பிக் கிடப்பதைத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

கிண்டோ மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் கட்டட இடிபாடுகளில் இருந்து கைகளை அசைத்தும், துவாய்களைக் காட்டியும் மீட்புப் பணியாளர்களை உதவிக்கு அழைப்பதையும் தொலைக்காட்சி காண்பித்தது. 'அம்புலன்ஸ்' சைரன்களின் ஒலி அப்பகுதியில் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தது. (ஐ)

# சொத்து விவரங்களை வெளியிடுமாறு அமைச்சர்களுக்கு வாஜ்பாய் கடிதம்

புதுடில்லி, ஜன. 28

தங்கள் குடும்ப சொத்து விவரங்களைப் பகிரங்கப்படுத்துமாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தமது அமைச்சரவை உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமக்குச் சொந்தமான கடைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் காணி, வீடுகள், வங்கிக் கணக்கு விவரங்களையும், தமது பிள்ளைகள், பெற்றோருக்குச் சொந்தமான சொத்து விவரங்களையும் தெரியப்படுத்துமாறு அமைச்சர்களை கடிதம் மூலம் பிரதமர் கோரி உள்ளதாக்த் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்ற ஒரு கோரிக்கையை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் கட்சித் தலைவர்களிடம் விடுத்துள்ளார். (ஐ-க)

## தஸ்லிமா மீண்டும் சுவீடனுக்கு

டாக்கா, ஜன. 28

பங்களாதேஷின் பெண்ணிய எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின் மீண்டும் நாட்டை விட்டு வெளியேறி சுவீடனில் தஞ்சமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் அடிப்படை வாதிகளின் கொலை அச்சுறுத்தல் காரணமாக நீண்ட காலம் வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் செய்த நஸ்ரின் அண்மையில்தான் பங்களாதேஷ் திரும்பி இருந்தார். ஆனால் அவர் கொல்லப்பட வேண்டும் என்று தீவிரவாத முஸ்லிம்கள் விடாமல் விரட்டி வந்தனர். அதனை அடுத்தே அவர் மீண்டும் நாட்டை விட்டுத் தப்பி உள்ளார்.

இஸ்லாத்தை அவமதித்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (ஐ)

## இந்திய ஜனாதிபதியைக் காணவில்லை...!

புதுடில்லி, ஜன. 28



இந்திய ஜனாதிபதியைக் காணவில்லையா?

பெங்களூர் தூரதர்ஷன் தொலைக்காட்சி அலைவரிசையில் கடந்த திங்கட்கிழமை மாலை காணாமற் போனோரின் பெயர்ப்பட்டியலை அறிவிப்பாளர் வாசித்துக் கொண்டு இருந்தபோது 6 செக்கன்கள் இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணனின் படம் காண்பிக்கப்பட்டதாக 'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகை செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டது.

இவரின் படம் காண்பிக்கப்பட்ட வேளை அறிவிப்பாளர் 'இந்த நபர் இருக்குமிடத்தைத் தெரிந்த எவராவது இருந்தால் பொலீஸ் இன்ஸ்பெக்டர், பொலீஸ் கட்டுப்பாட்டறை 2256242 அல்லது 100 என்ற இலக்கத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்' என்று அறிவித்தார்.

ஆனால் நாராயணன் காணாமல் போகவில்லை, இருக்கிறார் என்பதை செவ்வாய்க்கிழமை அறியக் கூடியதாக இருந்தது. இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு புதுடில்லியில் நடைபெற்ற முப்படையினரின் அணிவகுப்பை அவர் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். (ஐ-10)

## ஹுசேய்னின் வாரிசாக மகன்

அம்மான், ஜன. 28

ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் தனது அரசியல் வாரிசாக தனது மகனான அப்துல்லா பின் ஹுசேய்னை அறிவித்துள்ளார்.

தனது சகோதரன் ஹசன் இராணுவ விவகாரங்களில் தலையிட்டதன் காரணமாகவே தனது மகனை வாரிசாக நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மன்னர் ஹுசேய்ன் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் அவரது சகோதரர் ஹசனே ஆட்சிப் பொறுப்பை ஏற்றியிருந்தார். (ஐ-10)

# இந்தியா வெட்கித் தலை குனிகிறது

## வாஜ்பாய் கவலை

புதுடில்லி, ஜன. 28

ஆஸ்திரேலிய மதபோதகரும் அவரது இரு புதல்வர்களும் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டமை இந்தியா வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் பிரதமர் வாஜ்பாய்.

மிருகத்தனமான இப் படுகொலைகளைப் புரிந்தோர் மீது கருணை காட்டப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய மதபோதகரும் அவரது இரு புதல்வர்களும் கார் ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த சமயம் சுடர்ச் வெள்ளியன்று தீ மூட்டிக் கொல்லப்பட்டனர். இப் படுகொலைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல கட்சிகளும் கோரி உள்ளன. ஆஸ்திரேலியா இக் கொலைகள் குறித்து கடும் விசனம் தெரிவித்துள்ளது. (ஐ)

உலக அரங்கில்

# 'பஸ்ரா' நகரில் சிவிலியன் இலக்கு தாக்கப்பட்டது! ஈராக் சீற்றம்; அமெரிக்கா வருத்தம் தெரிவிப்பு

பக்தாத், ஜன. 28

ஈராக்கின் தென்பகுதி நகரமான பஸ்ராவில் சிவிலியன்கள் வசிக்கும் பகுதியை அமெரிக்க ஏவுகணை ஒன்று திங்களன்று தாக்கியது. இச் சம்பவத்தில் சிவிலியன்கள் சிலர் உயிரிழந்தனர். இச் சம்பவத்துக்கு அமெரிக்கா வருத்தம் தெரிவித்துள்ளது. பழிக்குப் பழி வாங்குவோம் என்று ஈராக் கூறி உள்ளது.

ஈராக்கின் வடக்கிலும், தெற்கிலும் விமானங்களுக்குத் தடை விதிக்கப்பட்ட வான் பகுதியில் பறந்த அமெரிக்க விமானங்கள் ஈராக்கிய இலக்குகளைத் தாக்கின; ஈராக் திருப்பித் தாக்கியது என்றும் அதற்கு அமெரிக்க விமானங்கள் பதிலடி கொடுத்ததாகவும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

பஸ்ரா நகரில் பொதுமக்கள் இலக்கு ஒன்று தாக்கப்பட்டதாக வெளியான தகவல்களைப் பரிசீலித்து வருவதாகவும் —

அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களுக்கு சேதம் ஏற்படுவதை இயன்றளவு குறைத்தே திட்டங்கள் தீட்டப்படுவதாகவும் அமெரிக்கத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை அமெரிக்க ராஜாங்க வட்டாரங்கள் ஒத்துக்கொண்டன.

இத்தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து பஸ்ரா மக்களுக்கு அதிபர் சதாம் விசேட செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

பஸ்ராவில் சேதம் ஏற்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் நடைபெறுகின்றன.

இது அமெரிக்கா திட்டமிட்டு நடத்திய தாக்குதல் என்றே பஸ்ரா நகர மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## 99 வயது சீன வயோதிபர் மணமகள் தேடுகிறார்

பீஜிங், ஜன. 28

99 வயதுடைய சீன இனத்தைச் சேர்ந்த ஒருவர் திருமணம் செய்ய மணப்பெண் தேடி "சென் சியாங்சர் வின் ஹெரல்ட்" என்ற பத்திரிகையில் அண்மையில் விளம்பரம் செய்திருந்தார்.

இந்த விளம்பரத்தைப் பத்திரிகையில் பார்த்த 11 பெண்கள் திருமணத்துக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்தப் 11 பேரும் 25 முதல் 80 வயதிற்கு உட்பட்டவர்கள் ஆவர்.

சாங் கெப்ரோ என்ற இந்த 99 வயதுடைய வயோதிபர் 1900 ம் ஆண்டு பிறந்தார் அவரது மனைவி 1997 ஆம் ஆண்டில் இறந்ததைத் தொடர்ந்தே மணமகள் தேடி இவர் பத்திரிகையில் விளம்பரம் செய்தார். அவரைத் திருமணம் செய்ய 11 பெண்கள் முன்வந்துள்ள போதிலும் அவர்களில் எவரையும் அவர் இதுவரை மனைவியாகத் தெரிவு செய்யவில்லை. (ஐ-10)

## மூளைப்புற்று நோய்க்கு மருந்தாகும் தேள் விஷம்

நியூயோர்க், ஜன. 28

தேள் விஷத்திலிருந்து எடுக்கப்படும் ஒருவகைப் பொருள் மூளைப்புற்று நோய்க்கு மருந்தாகப் பயன்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள அலபாமா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் குழு இதைக் கண்டுபிடித்துள்ளது.

இஸ்ரேலில் உள்ள ராட்சத தேளில் இருந்து எடுக்கப்படும் இரசாயனப்பொருள் மூளைப் புற்று செல்களை அழிப்பது தெரிய வந்துள்ளது.

சோதனைக்குழாய் ஆய்வில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதோடு தேள் விஷத்தில் இருந்து எடுக்கப்பட்ட பொருளை சுண்டெலிகளுக்குச் செலுத்தியதில் நல்ல முன்னேற்றம் இருந்தது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நடராசா சிற்சபேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 781313785V). விசேட அடையாள அட்டை (090202405) கடந்த 21-1-99 அன்று வில்லூண்டிப்பிள்ளையார் வீதிக்கும், மானிப்பாய் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராமையா செட்டியார் அன்சன்ஸ், 172, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (62521)

### விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பியதும் பூச்சி அகற்றியதுமான Dash Hound நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு. அ.வசந்தகுமார் (கிளிமாமா), பிரசாத் வீதி, நவாலிதெற்கு: (62503)

### புதிய பிரிவு

தமிழ், ஆங்கில, தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் (புதிய பிரிவு) 1-2-99 இல் ஆரம்பமாகவுள்ளன. பயிற்சி நிலையம், சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால் எனும் முகவரியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (62493)

### திருமண சேவை

சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். நேரிலும், தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம். க. திலகராசா, இல. 36/11, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (62527)

எங்களிடம் அரச தொழில் புரியும் வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், பட்டதாரி ஆசிரியர், வர்த்தகர் மற்றும் வெளிநாட்டு மணமகன், மணமகள் ஆகியோரது சாதகங்கள் உண்டு. தொடர்பு- க. நாகேந்திரம், ஐயனார் திருமண சேவை, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (62497)

## நியமனம்

வலிகாமம் கல்வி வலயத்தின் நிர்வாக உத்தியோகத்தராக ச. வீரசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிர்வாக உத்தியோகத்தராக அதி சிறப்புத் தர பதவி உயர்வுடன் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமனம் பெற்றுள்ள இவர் இம்மாதம் 11ஆம் திகதியில் இருந்து மேற்படி கல்வி வலயத்தில் தமது கடமைகளை ஏற்றுக்கொண்டுள்ளார். (ஐ-152)

## குருபூசை அனுஷ்டிப்பு

ஈழத்து சித்தர்களில் ஒருவரான சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரின் குருபூசைத்தினம் கடந்த 24 ஆம் திகதி சுன்னாகம் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோவிலில் அனுஷ்டிக்கப்பட்டது.

விசேட அபிசேக ஆராதனைகளும், சமயச் சொற்பொழிவுகள், மகேஸ்வர பூசை என்பனவும் இடம் பெற்றன. (ஐ-7)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
BY
BRITTO
ஆரம்பம்: 30—01—99
2 மணி
புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(62526)

## WALK IN INTERVIEW

Wanted an experienced Accounts Cum Store Keeper Clerk to a business establishment in the Jaffna Municipal limit.

| | | |
|---|---|---|
| Age | - | Under 50 yrs. |
| Experience | - | 10 Yrs. |
| Salary | - | Negotiable. |
| Date | - | 01 - 02 - 99 Monday. |
| Time | - | 10 A. M. - 12 Noon. |

Call at: NO. 39, 3 rd CROSS STREET. JAFFNA.
(62531)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கப் பணியாளர்
**திரு. ம. யேக்கப்**
அவர்களின் அன்புத் தாயார்
**மனுவேல் செல்லம்மா**

அவர்களது இழப்பினால் பரிதவித்து நிற்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பணிப்பாளர் சபை, பணியாளர்கள்,**
**யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்,**
**கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,**
**யாழ். பட்டணக் கிளை.**
(62537)

## கண்ணீர் அஞ்சலி

**வண. சாம் அல்பிறட்**

மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் பிரதம சேவக் வணக்கத்துக்குரிய சாம் தேவரத்தினம் அல்பிறட் (சாம் அண்ணை) அவர்களின் மறைவையிட்டு யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தினர் தமது இதயத்து அஞ்சலியைக் கண்ணீர்ப் பூக்களாக சமர்ப்பிக்கின்றனர்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், ஊழியர்கள்.**

**யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம்,**
மருதனார்மடம் - சுன்னாகம்.
(62538)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க பொதுமுகாமையாளர்
**திரு. கா. சிவஞானம்**
அவர்களின் அன்புத் தந்தையாரும்
**திருமதி சி. ஜெயபவானி**
(கணக்குப் பதிவாளர்)
அவர்களின் அன்பு மாமனாருமாகிய
**கந்தன் கார்த்திகேசு**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**அங்கத்தவர்கள்,**
**தெல்லிப்பழை பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
(62535)

## இதய அஞ்சலி

எமது இறையியல் கல்லூரியின் முன்னாள் மாணவ சபைக்குருவும் (Chaplain) கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் பிரதம சேவக்காகவும் பணியாற்றிய
அருட்திரு.
**சேவக் சாம் அல்பிறட்**
(சாம் அண்ணன்)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த வேதனையடைகின்றோம். எமது கல்லூரிக்கு பல வழிகளிலும் ஆறுதலின் கரமாக இருந்து எம்மை ஆற்றுப்படுத்திய சாம் அண்ணன் பலவித வசதியீனங்கள் இருந்த போதும் அவற்றைப் பொருட்படுத்தாது தன் அழைப்பை நோக்கி திருப்பணி புரிந்தார். உயர் மதிப்பிற்குரிய சாம் அண்ணாவின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் ஆச்சிரம நண்பர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கல்லூரிக் குடும்பத்தினர்.**
**கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,**
மருதனார்மடம்,
சுன்னாகம்.
(62524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புடைவைக்கடையில் சகல வேலையும் செய்யக் கூடிய 20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட ஆண் தேவை. புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளரும் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விவரத்துக்கு நேரில் வரவும்.

**சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்,**
**இல. 21, நவீன சந்தை கட்டடம்,**
**மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
(62536)

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணசாமி பரமேஸ்வரி

கரணவாய், கரவெட்டியைச் சேர்ந்த கிருஸ்ணசாமி பரமேஸ்வரி 27. 01. 99 அன்று காலமானார்.

இவர் சின்னத்தம்பி மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் கிருபாவின் அன்புத் தாயாரும், அகிலனின் மாமியாரும் றொஷானி, கீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28. 01. 99) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 11 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. அகிலன்**
(நெல்லைக்குமரன்)
கரணவாய்,
கரவெட்டி.
(62533)

### கந்தன் கார்த்திகேசு

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும். வசந்தபுரம் இளவாலையில் வசித்து வந்தவரும் தற்போது பொன்னாலை வீதி, மானிப்பாயில் (எழுமுள்ளி) வசித்து வந்தவருமான கந்தன் கார்த்திகேசு அவர்கள் 27-01-99இல் இயற்கை எய்தினார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று (28--01-99) வியாழக்கிழமை முற்பகல் 10 - 00 மணிக்கு பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
**கா. சிவஞானம்** (மகன்)
பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை,
ப.தெ.வ.அபி.கூ. சங்கம்.
பொன்னாலை வீதி,
(எழுமுள்ளி), மானிப்பாய்,
(62534)

### ஏகாம்பரநாதன் சிவானந்தா

(ஸ்ரீகாந்தா லொறி உரிமையாளர்)

தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏகாம்பரநாதன் சிவானந்தா கொழும்பில் 26 - 01 - 1999இல் காலமானார்.

அன்னார் ஏகாம்பரநாதனினதும் காலஞ்சென்ற ஈஸ்வரி அம்மாவினதும் அன்பு மகனும் திருமதி சி.மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், ஜனனி, ஜனகன், அம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேரா (நியூசிலாந்து), க. கமலகுமாரி, ஏ. அருட்செல்வம் (வவுனியா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசராஜா, தயானந்தி, ஜெயந்தி, சற்குணராஜா (டென்மார்க்), நற்குணராஜா, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்லையா, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். இவ் வறிவித்தலை உற்றார், உறவிளர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**ப. க. ஏகாம்பரநாதன்**
(தகப்பன்)
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.
(62523)

### திருமதி இராசையா ஞானபூரணம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசையா ஞானபூரணம் 27 - 01 - 99 அன்று காலமானார்.

இவர் முதலித்தம்பி சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு இராசையாவின் அன்பு மனைவியும், கனகேஸ்வரி இராசையா B. A. (ஆசிரியை, யா / இணுவில் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற இராசையா கதிரமலைநாதன், பஞ்சலிங்கம் (கனடா), சண்முகலிங்கம் (ஓமான்), காலஞ்சென்ற அன்னலிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும், கணபதிப்பிள்ளை இராசையா (B. Com.), யோகராணி, இரஞ்சிதம், பரமேஸ்வரி (அராலி), ஆகியோரின் மாமியாரும், இ. உமாகாந்தன், புருஷோத்தமன், மைதிலி, அபிராமி (கனடா), கிஷோர் (ஓமான்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, குமாரலிங்கம், ஞானம்மா மற்றும் அன்னம்மா, அசுபதி, கைலைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-1-99) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1-00 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**கனகேஸ்வரி இராசையா**
(மகள்)
''உமாகிரி''
சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.
(62530)

# இடைநிலை மருத்துவ சேவை பயிற்சிக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஜன. 28

இடைநிலை மருத்துவ சேவைப் பயிற்சி நெறிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சையில் மருந்தாளர் பயிற்சி நெறி, வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறி என்பவற்றுக்கு தெரிவானவர்களின் பெயர் விவரங்களை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். அவற்றின் விவரம் வருமாறு

மருந்தாளர் பயிற்சி நெறி

ஏ. ஜே. மகிழினி (யாழ்ப்பாணம்), என். மகாலெட்சுமி (அரியாலை), பி. கோபிதாஸ் (பருத்தித்துறை), எல். மாதினி (சண்டிலிப்பாய்). பி. கலைச்செல்வி (பருத்தித்துறை), ஏ. அரவிந்தன் (அல்வாய்). கே. றேணுகா (கரவெட்டி) எஸ். மாலதி (மாதகல்), எம். அனுசுயா (யாழ்ப்பாணம்), பி. தர்சினி (கோண்டாவில்), கே. சிவதர்சினி (உடுப்பிட்டி), எம். கௌரிதேவி (யாழ்ப்பாணம்), எஸ். கேதீஸ்வரன் (கோப்பாய்), கே. திருச்செல்வி (சாவகச்சேரி).

வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறி:-

ஏ. ரட்ணாம்பாள் (கைதடி), வி. யசோதராதேவி (பருத்தித்துறை), ஏ. நர்மதா (பருத்தித்துறை), பி. செந்தில்குமரன் (நல்லூர்), செல்வி. சிவஞானம் மாணிக்கம் (மீசாலை), எஸ். சிறீகௌரி (அச்சுவேலி). எட்வேட் சுபோதினி (மல்லாகம்), கே. கஜேந்தன் (புலோலி), பி. சுஜிதா (கரவெட்டி), எஸ். சுபாஜினி (கந்தரோடை),

மேற்படி பயிற்சி நெறிகளை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் கொழும்பில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்—

இவர்களுக்கான கடிதங்கள் வெகு விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும்—

சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

(ஐ-க)

## கைதாகிவிடுதலையானவர் காணாமற் போனாராம்!

யாழ்ப்பாணம், ஜன. 28

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டு வீடு திரும்பிய இளைஞர் ஒருவர் காணாமற்போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏழாலை மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் பாஸ்கரன் (வயது 20) என்ற இளைஞரே கடந்த 23 ஆம் திகதியிலிருந்து காணாமற் போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் கடந்த டிசெம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டு வீடு வந்து சேர்ந்தார்.

கடந்த மாதம் இப்பகுதியில் இடம்பெற்ற சுற்றி வளைப்பின் போது மீண்டும் படையினரால் கைது செய்யப்பட்ட இவர் படையினரின் பணிப்பின் பேரில் ஒவ்வொரு வாரமும் முகாமிற்கு சென்று கையெழுத்து இட்டு வந்தார்.

கடைசி வாரம் இவர் முகாமிற்கு சென்று கையெழுத்து வைக்கத் தவறியதை அடுத்து அவரை முகாமிற்கு அழைத்து படையினர் கையெழுத்து வைக்கச் செய்தனராம்.

இச்சம்பவத்திற்கு ஒரு சில நாள்களின் பின் கடந்த 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு தமது வீட்டிலிருந்து வெளியே சென்ற இவர் இது வரையும் வீட்டிற்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)


# தூரிகை
## நுண்கலை வளாகம்
## பயிலுநர்கள் அனுமதி - 1999

மேற்படி நிறுவனத்தின் நல்லூர், நெல்லியடி பிரிவு நிலையங்களில் ஆரம்பமாகவுள்ள உடை அமைத்தல், கேக் அலங்காரம், HAIRSTYLE, FABRIC PAINTING, பூவேலை பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

சான்றிதழுடன் கூடிய குறுகிய கால பயிற்சிகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் மேலதிக விவரங்களை நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

★ வசதி குறைந்தோருக்கு சலுகைகள் உண்டு.

சட்டநாதர் வீதி, நல்லூர். M. M. V. றோட், நெல்லியடி.

(சி/6286)


ஓம் சாயிராம்

# ஏழாம் ஆண்டு நினைவு

மண்ணில் 04 — 05 — 1915



விண்ணில் 17 — 01 — 1992

அமரர்

**P. M. இராசரத்தினம்**

(ஓய்வுபெற்ற பதிவாளரும், மாவட்டக் காணிப் பதிவாளரும், தாவடி, ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய ஸ்தாபகரும்.)

**திதி: பூர்வபட்ஷ துவாதசி — 28 — 01 — 1999**

மலைபோல இருந்த குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் திறம்பட நிறைவேற்றி, ஆத்மீகத்துறையிலும் சிறந்த சாதனை செய்து, புனித தினத்தில் இயற்கையெய்திய எம் குடும்பத் தலைவரை என்றும் நினைவு கூருகின்றோம்.

**திருமதி மகேஸ்வரி இராசரத்தினம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பிள்ளையார் கோயிலடி,
தாவடி.

"பிதிர்க் கிரியைகள் இகழ்ச்சிக்குரியவை அல்ல:
அவை இறந்த ஆத்மாவிற்குச் செய்ய வேண்டிய சேவை."
— பாபா
(SAI SPEAKS VOL. 5)

(62505)

## தளபாடம் பற்றாக்குறை

யாழ்ப்பாணம். ஜன. 28

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் அடங்கும் முகமாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நிலவும் தளபாடப் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் பாயில் இருந்து படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 65 மாணவர்கள் இவ்வாறு தரையில் இருந்து கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 28

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட அமரர் எம். செல்லத்துரை ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும், காட்சி ஆட்டங்களும் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவிருக்கின்றன.

ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ சனிக்கிழமை— பிற்பகல் 3 மணி — காட்சி ஆட்டம் — நக்கீரன் வி. க. அணி எதிர் பொலிகை பாரதி வி. க. அணி.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் — பருத்தித்துறை ஐக்கிய வி. க. அணி எதிர் திக்கம் வி. க. அணி.

★ ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் — கலட்டி ஐ. வி. க. அணி. எதிர் டயமன்ஸ் வி. க. அணி.

இறுதிப் போட்டிக்கும், பரிசளிப்பு வைபவத்துக்கும் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-3)

## கல்வி அதிகாரிகள் குழு நெடுந்தீவுக்கு விஜயம்

நெடுந்தீவில் சங்கீதம், நடனம் கற்பிக்கும் ஆசிரியர்கள் உட்பட ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக தீவுப்பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

தீவுப்பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் பதினொரு பேர் கொண்ட கல்வி அதிகாரிகள் குழு நெந்தீவுக்கு கடந்த வாரம் வருகை தந்தது.

நெடுதீவுப் பிரதேச சபைத் தலைவர் அ வெ. அரியநாயகம் தலைமையில் பிரதேச சபை உறுப்பினர்கள் கல்வி அதிகாரிகள் குழுவை வரவேற்றனர்.

பாடசாலைக் கட்டடங்களின் நிலைமைகள், தளபாடங்கள் பற்றாக்குறை, முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்களின்மை குறித்து இக்குழு உரையாடியது. கல்வி அதிகாரிகள், அதிபர்கள் ஆசிரியர்களுடனும் பாடசாலைத் தேவைகள் மாணவர்களின் கல்வி நிலைபற்றிக் கலந்துரையாடினர். பாடசாலைகளுக்கும் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

(ஐ-111)

# கண்ணீர் அஞ்சலி

**REVD. SEVAK SAM T. ALFRED**

(முன்னாள் தலைவர், உடுவில் வை. எம். சி. ஏ.)

அவரின் மறைவால் ஏற்பட்ட நிவர்த்தி செய்ய முடியாத வெற்றிடத்தையிட்டு எமது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்து கண்ணீர்த் துளிகளை காணிக்கையாகப் படைக்கின்றோம்.

இயக்குன உறுப்பினர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
**UDUVIL Y. M. C. A.**

(62525)

உ

# ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் மகா குருபூசையும் "ஞானநிட்டை" நூல்வெளியீடும்

**காலம்:** 30 - 01 - 1999 சனிக்கிழமை காலை 9-30 மணி

**இடம்:** ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி

தலைவர்:
**திரு. இ. குழந்தைவடிவேலு**
(சமாதான நீதிவான்)

பிரதம விருந்தினர்:
**திரு. பு. சுந்தரம்பிள்ளை**
(பிரதேச செயலர், தென்மராட்சி)

கௌரவ விருந்தினர்:
**திரு. த. குகனேசன்**
(அம்பிகை களஞ்சியம், யாழ்ப்பாணம்)

அருள் நோக்கு:
**சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்**
(ஆச்சிரம பீடாதிபதி)
**ஸ்ரீ சச்சிதானந்த ஆறுமுக சுவாமிகள்**

வரவேற்புரை:
**திரு. சு. செல்வராசா** (செயலாளர்)

தலைமையுரை: **தலைவர்**

பாமாலை: ''ஞானநிட்டை': பாமாலை ''சாகித்திய இசைப்பேரரசு''
**திரு. நா. வி. மு. நவரெத்தினம் M. Phil.**
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

வெளியீட்டுரை:
**பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்**
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

முதற்பிரதி பெறுநர்:
**திரு. ஜெ. முத்துக்குமரசுவாமி**
(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி - 2 ஆம் கிளை, யாழ்ப்பாணம்)

நூல் ஆய்வுரை:
**திருமதி கலைவாணி இராமநாதன்**
(முதுநிலைவிரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

பதிலுரை:
**நூலாசிரியர் டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன்**

சிறப்புரை:
**வைத்திய கலாநிதி வ. சின்னப்பு அவர்கள்**
**திரு. சு. இராமலிங்கம்**
(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)
**திருமதி க. ஜெகவதனராசா**

நன்றியுரை:
**திரு. அ. லோகநாதன் B. Sc.**
(இணைச் செயலாளர்)

❖ அன்பர்கள், அடியார்கள் பங்கேற்று குருவருள் பெற்று மகேஸ்வர பூசையிலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

**இ. குழந்தைவடிவேலு J. P** — தலைவர்
**க. செல்வராசா** — பொதுச் செயலாளர்
**பொ. கந்தசாமி** — நிதிச்செயலாளர்

**ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்**
கைதடி.

(62468)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை வெளிவாரிப் பரீட்சை

# முடிவு அடுத்த மாதம் வெளியாகும்

யாழ்ப்பாணம், ஜன. 28 பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட பொதுக்கலை மாணிப்பட்டப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் நடுப்பட்குதியில் வெளியிடப்படும் என வெளிவாரிப்பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை, குருநாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றது.

இப்பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் 200 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)


## இலங்கை மின்சார சபை

## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் காங்கேசன்துறை 33 கே வி ஏ மின் மார்க்கத்தில் முக்கிய சில திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 1999 — 01 — 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரைக்கும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

'' இலங்கை மின்சார சபை
சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு
கை கொடுக்கும் ''

**இலங்கை மின்சார சபை.**

மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

( C/6260 )



''அமைதியான
நல்லூர்ச் சூழலில்''

**A/L 2000**

**கணக்கீடு**

**திரு. பாலவாசன்**

**''கட்டுப்பாட்டுக் கணக்கு''**

**ஆரம்பம் 01 - 02 - 99**

(திங்கள்) காலை 6-30

**சயன்ஸ் அக்கடமி**

**நல்லூர்.**

(62351)



## வைப்புப் பணமின்றி உங்களுக்கு

**I.D.D.**

## வசதி



நீங்கள் மாதாந்தம் 100 ரூபா செலுத்துவதாக உறுதிசெய்வதன் மூலம் வைப்புப் பணம் எதுவுமின்றி உங்கள் வழமையான தொலைபேசியை ஐ.டி.டி வசதி கொண்டதாக மாற்றித் தருவோம் நீங்கள் 147 நாடுகளுக்கு அழைப்பு எடுக்கலாம்

மாதாந்த கட்டணத்தை மேலும் அதிகமாக செலுத்தி அதற்கேற்ப உங்கள் ஐ.டி.டி. அழைப்புக்களுக்கான உச்ச எல்லையை அதிகரிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு நான்கு வகையான திட்டங்கள் உங்களது வசதிக்கு ஏற்ப எம்மிடம் உள்ளன

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள பிராந்திய தொலைத் தொடர்பு அலுவலக முகாமையாளரைச் சந்தியுங்கள் அல்லது 555555 என்ற இலக்கத்திற்கு அல்லது 494727 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்

| [illegible] | குறைந்தபட்ச மாதாந்த கட்டணம் | ஐ.டி.டி அழைப்புக்கான மாதாந்த உச்ச எல்லை |
|---|---|---|
| A | ரூ 100/ | ரூ 3,000/- |
| B | ரூ 200/ | ரூ 5,000/ |
| C | ரூ 400/ | ரூ 10,000/ |
| D | ரூ 600/ | ரூ 20,000/- |

**உலகெங்கும் பேசுங்கள்**

ஸ்ரீ லங்கா ரெலிகொம

அவசர தொலைபேசி

555555/494727

(சி/6205)



## வலி. கிழக்குப் பிரதேச சபை

நீர்வேலி

ஒப்பந்த அடிப்படையில்

## வேலைத்தொழிலாளர்களைச் சேர்த்தல்

இப் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் கீழ்க் குறிப்பிட்ட தகைமையும், தேர்ச்சியும் கொண்ட ஆண் பொதுத் தொழிலாளிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கான விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சுய விவரங்களைக் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டு **09 - 02 - 99** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி' என்னும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தகைமைகள் — 5 ஆம் தரம்.
வயது — 18 தொடக்கம் 40 வரை.

**பூ. குணசிங்கம்**
**தவிசாளர்,**

வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.
25 - 01 - 99

(சி/6273)



தென்மராட்சி
இளைப்பாற்று வேதனம் பெறுவோர்
நலன்புரிச் சங்கம்

## 8ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1999

பதிவு இல. 249 / 5

காலம்: 31 - 01 - 1999 **ஞாயிற்றுக்கிழமை**
மு. ப. 10.30 **மணி** (புதிய நேரம்)

இடம்: **சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வ. சரவணமுத்து** — தலைவர்
**சி. கந்தையா** — கௌரவ செயலாளர்
**சிவப்பிரகாசம்** — பொருளாளர்

குறிப்பு: இற்றைவரை 45 அங்கத்தவர்களுடைய மரணச் சகாய நிதியாக ரூ 78,253 அவர்களின் பின் உரித்தாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. புதிதாகச் சேரவிரும்புவோர் கூட்டத்திலன்று சமுகமளிக்கவும்.

(62487)



## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்னையா சிவகுரு

அன்னை மடியில் **12—04—1928**
இறைவன் அடியில் **24—01—1994**

**திதி**: 28 - 01 - 1999 **துவாதசி**

ஆண்டைந்து சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்
உள்ளங்களை விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோலை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன், உற்றார், உறவினர்.**

மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(62509)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காலை வெட்டுதல் தொடரலாமா?

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் அரச படைகளால் விடுவிக்கப்படாத பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாமா?

இது குறித்துத் தீர்மானிக்கும் பொருட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் மகாநாடு ஒன்று நடைபெறுவதாக இருந்தது.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் விடுவிக்கப்படாத பகுதிகள் என்று பெயர் சூட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகள் எதுவும் நடைபெறுவதில்லை. பிரமாண அடிப்படையில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மட்டுமே அப்பகுதி மக்களின் தேவைகளை அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

விடுவிக்கப்படாத பகுதிகளில் 'பாதுகாப்புக் காரணம்' கருதி அபிவிருத்தி வேலை எதனையும் செய்வதற்கு அரசாங்கம் இதுவரை நினைத்ததில்லை. பெரும் பண முதலீட்டுடன் செய்யப்படும்அபிவிருத்தித் திட்டங்கள், இராணுவ நடவடிக்கைகள் மற்றும்எதிர்த் தாக்குதல்களின் போது சேதமடையலாம் என்று அரச தரப்பில் காரணம் கூறப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின், அதன் அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலும் மக்கள் தமது தேவைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்ற இயலாத நிலை மறைக்க முடியாத ஒன்று.

விடுவிக்கப்படாத பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாது என்ற அரசின் நிலைப்பாடு, அப்பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பாகுபாடு காட்டும் செயல். அந்த மக்கள் இலங்கை அரசின் பிரஜைகள் அல்லர் என்றும் இது அர்த்தம் தரும்.

வடக்கு—கிழக்குப் போர் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பெரிய அளவில், தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, விடுவிக்கப்படாத பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் இத்தனை வருடங்களாகச் செய்யப்படாமல் இருப்பதால் அப்பகுதிகளின் பன்முகக் கட்டமைப்புகளும் சீரழிந்துள்ளன.

போரையும் அதன் விளைவாகப் பாதுகாப்புக் காரணத்தையும் கூறி, தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளைச் செய்யாதிருப்பது அவற்றை வேண்டுமென்றே புறக்கணித்துப் பின்னடையச் செய்யும் தீய நோக்கம் கொண்டதே ஆகும்.

தமிழர்களைப் புறக்கணிப்பது, பின்தள்ளுவது அவர்களின் பிரதேசங்களை அழிப்பது அரசாங்கத்தின் நோக்கம், இலக்கு இல்லையெனில்—

போரை நிறுத்தி அவர்களுக்கான வசதிகளையும் சேவைகளையும் அபிவிருத்தி வேலைகளையும் செய்யவேண்டும்.

அவ்வாறு இல்லையெனின் சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டும் இனச் சித்திரவதையிலேயே அரசுக்கு நாட்டம் என்பதல்லவா?

# கோழித் தீவன விலை அதிகரிப்பால் பண்ணையாளர்கள் பெரும் பாதிப்பு

வலிகாமம் தெற்கு, ஜன 28

யாழ். குடாநாட்டில் பல சிறு கோழிப் பண்ணையாளர்கள் கோழி வளர்ப்பைக் கைவிட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக கோழித் தீவனத்தின் விலை உயர்வும், முட்டையின் விலை வீழ்ச்சியுமே சிறு கோழிப்பண்ணையாளர்களைப் பாதித்து கோழி வளர்ப்பைக் கைவிட அவர்களைத் தூண்டி வருகின்றது.

அதிகரித்துள்ள கோழித் தீனி வகைகளின் செலவுக்ேற்ப முட்டை உற்பத்தி கிடைக்காமையாலும் முட்டையின் விலையில் வீழ்ச்சி கண்டிருப்பதாலும் தொடர்ந்து நஷ்டமடையும் நிலையால் பலர் கோழி வளர்ப்பைக் கைவிட்டு வருகின்றனர்.

குடாநாட்டில் மீனின் வருகை அதிகரித்து அதன் விலையும் குறைந்துள்ளமையும் முட்டை விலை வீழ்ச்சிக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் முட்டையின் விலை 6 ரூபா 50 சதமாக இருக்கும் போது 50 கிலோ நிறையுடைய கோழித் தீவனம் ஆயிரத்து 500 ரூபா வரையில் தனியார் நிறுவனங்களில் விற்பனையாகின்றன.

சிறு பண்ணையாளர்கள் கோழிவளர்ப்பைக் கைவிட்டு வருவதனால் குடாநாட்டில் கோழிகளின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைந்து விட்டது.

இதன் காரணமாக இறைச்சிக்கோழிகளுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடும், கோழிகளின் விலையில் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ இறைச்சிக் கோழி 180 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ஐ-152)

### வாக்களிப்பு நிலையங்களில்

## பெண்கள் தாக்கப்பட்டதை கண்டிக்கிறது 'மேர்ஜ்'

கொழும்பு, ஜன. 28

வடமேல் மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரிந்த ஐ.தே.க., ஜே.வி.பி. ஆகியவற்றின் பெண் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் இடம்பெற்ற அரசியல் வன்முறைகள் மற்றும் முறைகேடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றில் பணிபுரிந்த ஐ,தே.க., ஜே.வி.பி. பெண் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டு, கடமை செய்ய விடாது தடுக்கப்பட்டனர். இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி இதுவரை கவலை கூடத் தெரிவிக்காததையிட்டு ஆச்சரியம் அடைகிறோம்.

சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இன்று மக்களின் ஜனநாயக உரிமையை குறிப்பாக பெண்களின் உரிமைகளைப் பறித்துள்ளது — என்றுள்ளது. (ஐ-3-10)

## இருவர் கைதானதாக உறவினர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம், கோண்டாவில்பகுதிகளில் இருஇளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்குப் பகுதியில் கடந்த 24ஆம் திகதி சுப்பிரமணியம் சுதாகரன் (வயது 17) என்பவரும், யாழ்ப்பாணம் சப்பல் வீதியில் யோசேப் சில்வேஸ்ரர் லக்ஸ்ரன் (வயது 23) என்ற இளைஞர் 25ஆம் திகதியும் படையினரால் கைது செய்யப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

## கூ. சங்கத்துக்கு தொலைபேசி

அரியாலை, ஜன. 28

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தொலைபேசி இணைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் சீ. வீ.கே. சிவஞானம் ரெலிக்கோம் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு முயற்சி மேற்கொண்டதை அடுத்து சங்கத்திற்கான தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-17)

### நாளை

தை 15

வெள்ளிக்கிழமை

திதி:, திரயோதசி

நள்ளிரவு 12.54 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

முன்னிரவு10.10 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 6.36 -8.06


ராகுகாலம்: 11.06-12.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நீ பிறருக்குத் தீங்கு செய்தாயானால் அதன் வருத்தத்தை உணர்ந்து நீயே அவர்களுக்குப் பரிகாரமும் செய்ய வேண்டும்.

- விவேகானந்தர்



## சாயி சிந்தனை

இங்கே ஒரு மனிதன் இருக்கிறான்: அவனைக் 'காமிரா' வால் படம் எடுத்தால், அவன் வெளிப்புறமாகப் போட்டிருக்கும் உடுப்பு, அதன் நிறம், அமைப்பு இதெல்லாம் தெரியும். வெளிப்புற வடிவம் தெரியுமே தவிர, உட்புறமான தத்துவம் எதுவும் விளங்காது. அவனையே X- Ray படம் எடுத்தால் உள்ளிருக்கும், எலும்பு, நரம்பு இவையெல்லாம் தெளிவாகத் தெரியும்.

நவீன காலக்கல்வி என்பது வெளிப்புறமான விஷயங்களைக் காட்டும் காமிரா ஃபோட்டோ மாதிரி, ஆனால் ஆன்மீகக் கல்வி என்பது X-Ray மாதிரி உட்புறத்தைத் தெளிவாக விளக்குகிறது. ஆகையால் தான் மனிதனுக்கு ஆன்மீகம் என்பது மிகவும் அவசியம். இந் நாளைய கல்வியில் [illegible] தர்மம் இவையெல்லாம் காணப்படவில்லை.

ஆதாரம்:- பிரசாந்தியில் அம்ருதவர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை பக்தர்களுக்கு விசேட பஸ்

நல்லூர், ஜன. 28

எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தைப்பூசத்தை முன்னிட்டு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இடம் பெறும் உற்சவத்திற்கு செல்வதற்காக யாத்திரிகர்களின் வசதியைக் கருதி யாழ் பஸ் நிலையத்தில் இருந்து குறிகாட்டுவானுக்கு விசேட பஸ் சேவைகள் நடைபெறும் என பஸ் நிலையப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ - 102)

## ஞானச்சுடர் நூல் வெளியீடு

கொழும்புத்துறை, ஜன. 28

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30மணிக்கு 'ஞானச்சுடர்'மாதாந்த நூல்வெள்ளியீட்டு விழா பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கான வெளியீட்டுரையை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ. சிவநாதன் நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை பேராசிரியர் க. சின்னத்தம்பி வழங்குவார். (ஐ-173-30)

## அடிக்கல் நடும் விழா

நெல்லியடி, ஜன. 28

புலோலி வடகிழக்கு உத்திராவத்தை அன்பு மலர் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. (ஐ-109)

# செய்திச் சாரம்

### நெல் மூடை 1,500 ரூபா

நாவற்குழி, ஜன 28

தனங்கிளப்பு மறவன் புலோப் பகுதியில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து வியாபாரிகள் நெல் கொள்வனவு செய்வதில் மும்மரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

தற்போது ஒரு மூடை நெல் ஆயிரத்து 500 ரூபாவாகக் கொள்வனவு செய்யப்படுகிறது. (ஐ-102)

### மரக்கன்றுகள் விநியோகம்

நாவற்குழி, ஜன. 28

தென்மராட்சிப் பிரதேச செயலரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் அண்மையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இக்கன்றுகளை மாணவர்கள் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நட்டு பராமரித்து வருகின்றார்கள். இவற்றினைப் பாடசாலை அதிபர் திருமதி வ. மேகலிங்கமும் இப்பகுதி கிராம சேவையாளர் ஆ.நடராசாவும் மேற்பார்வை செய்து வருகின்றார்கள். (ஐ-102)

### வீதி திருத்தம்

நாவற்குழி, ஜன. 28

கண்டி வீதியில் இருந்து நாவற்குழி வீதியை இணைக்கும் தச்சன் தோப்பு வீதி கடந்த வருடம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டது. இக்கிராம மக்களின் வேண்டுகோளின் பின் தற்போது மீண்டும் திருத்த வேலை ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி அடையும் நிலையில் உள்ளது. (ஐ-102)

### திரை நீக்கம்

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் ஆலயமுன்னாள் பிரதம குரு அமரர் சிவஸ்ரீ நா. சண்முக ரத்தினக் குருக்களின் திரு உருவப்படத் திரைநீக்க விழா எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் ஆலயத்தில் நடைபெற உளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் லகாநிதி எஸ். சிவலிங்கராசா இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திருவுருவப்படத்தினைத்திறந்து வைப்பார் (ஐ-7)

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ-க

### வீதி திருத்தப்படும்

செம்பியன்பற்று, ஜன.28

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி — பருத்தித்துறை வீதி திருத்தப்பட உள்ளது.

இவ் வீதி கடந்த 16 வருடங்களிற்கு மேலாக திருத்தப்படாமல் குண்டுங் குழியுமாக இருந்து வந்தது.

இவ் வீதியை இவ்வருட இறுதிக்குள் திருத்தி முடிக்க ஏற்பாடு செய்வது என மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-36)

# தொழில்களை ஆரம்பிப்போருக்கு

# கிராமிய வங்கிகளின் சமாசம் உதவும்

யாழ்ப்பாணம், ஜன. 28

பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் தொழில் திட்டங்கள் மற்றும் தொழில்சார் துறைகளில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களுக்கு உதவுவதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மேற்படி சமாசத்தின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;-

உள்ளூரில் கிடைக்கும் நிதியைக் கொண்டு உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் உள்ளூரில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் தற்போது அதற்கான நிதியை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஓரளவுக்கு வழங்கக்கூடிய நிலையிலிருக்கிறது.

தொழிற்றுறைகளில் ஆர்வமுள்ளவர்களுக்கு அவர்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் சமாசம் உதவத் தயாரான நிலையிலிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக நிதி தேவைப்படுவோர் மேற்படி சமாசத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களது விண்ணப்பங்களைச் சாதகமாகப் பரிசீலனை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-5)

## பயணிகள் விவகாரம்

# திருமலை பிரதேச செயலர் கொழும்பில் பேசுவார்

திருகோணமலை, ஜன. 28

வடக்கே செல்வதற்குக் கப்பல் வசதியின்றித் திருகோணமலையில் நிர்க்கதி நிலையில் உள்ளவர்களை அனுப்ப கப்பல் சேவை நடத்த வேண்டிய அவசியம் குறித்து அதிகாரிகளுக்கு விளக்க திருகோணமலைப் பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் வேலும் மயிலும் நேற்று முன்தினம் கொழும்பு சென்றுள்ளார்.

காங்கேசன்துறையில் இருந்து பயணிகளுடன் திருகோணமலைக்கு வந்து சேர்ந்த 'லங்கா முடித்த' கப்பல் மூலம் ஒரு தொகுதி பயணிகளை வடக்கே அனுப்ப வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்படாத நிலையிலேயே அவர் கொழும்பு சென்றுள்ளார்.

திருகோணமலையில் இரு மாத காலமாகத் தங்கியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை வடக்கே அனுப்ப வேண்டிய அவசியம் குறித்து அவர் அத்தியாவசிய சேவைகள் நாயகம் உட்படப் பல அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்.

(ஐ-37)

## ஜி. சீ. ஈ. பெறுபேறு

# மீளாய்வுக்கு விண்ணப்பம் புதிய நடைமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

ஜி. சீ. ஈ. உயர்தரம் மற்றும்சாதாரணதரப்பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வது தொடர்பாக விண்ணப்பிப்பதற்கு புதிய விதிமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பிப்போர் மீளாய்வு செய்யப்படும் பாடங்களுக்குரிய கட்டணங்களை — அதற்கு சமமான முத்திரைகளைப் பெற்று விண்ணப்பத்தில் அவற்றை ஒட்டி அனுப்புதல் வழமையாக இருந்தது எனவும் —

தற்போது மீளாய்வுக்குரிய கட்டணங்களைப் பிரதம மற்றும் உப தபாலகங்களில் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டையே விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்பி வைக்க வேண்டும் என்ற புதிய விதிமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எனவே பெறுபேற்று மீளாய்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் புதிய விதிமுறையைப் பின்பற்றியே ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்று மீளாய்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் —

இந்த விதிமுறையைப் பின்பற்றாது அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் பரீட்சைத் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

குடாநாட்டில் உள்ள சகல பிரதம, உப தபாலகங்களில் பரீட்சை மீளாய்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்குவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-7-5)

# திருக்குறள் மனனப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஜன. 28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டிகள் நடைபெற உள்ளன.

4 ஆம் 5 ஆம் தரத்தில் கற்கும் மாணவர்களிடையே இப் போட்டி நடைபெறும்.

பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி நடைபெற உள்ள இப் போட்டிக்குரிய விண்ணப்பங்களை பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதிக்குள் அவ்வப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார்.

பிரிவு ஒன்றுக்கான போட்டிகள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் —

பிரிவு இரண்டுக்கான போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் —

பிரிவு மூன்றுக்கான போட்டிகள் மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் — நடைபெறும்.

(ஐ-152)

# திருநெல்வேலிச்சந்தையில் கட்டடங்கள் அமைப்பு

கோண்டாவில், ஜன. 28

திருநெல்வேலிச் சந்தையில் இதுவரை காலமும் இருந்த கொட்டகைகள் அகற்றப்பட்டு ஐ நா. அபிவிருத்தித் திட்ட உதவியுடன் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அகற்றப்பட்ட கொட்டகைகளில் இதுவரை காலமும் தமது விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த வியாபாரிகள் தற்போது வெயிலில் வெவ்வேறு இடங்களில் தமது விற்பனை முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

(ஐ-ரீ)

# கூடைப்பந்தாட்ட பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நாளை முதல் கூடைப் பந்தாட்டப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தவிருக்கின்றது.

நாளை சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் —

நாளை மறு தினம் யாழ். மத்திய கல்லூரியிலும் —

எதிர் வரும் 31 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்திலும் — இந்த பயிற்சிப் பட்டறைகள் நடைபெறவிருக்கின்றன.

பயிற்றுவிப்போரும், பயிலுநர்களும், கூடைப்பந்தாட்ட அணி வீரர்களும் இப்பட்டறைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்பட்டறையின் இறுதி நாளான எதிர்வரும் 31 ஆம் திகதி மாலை யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி வீரர்கள் பங்குபற்றும் காட்சி கூடைப்பந்தாட்டமும் ஏற்பாடாகியுள்ளது.

இதனையடுத்து இந்த பட்டறையில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும், விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர் ஒருவருக்கும், வீராங்கனைக்கும் விருதுகளும் வழங்கப்படும்.

(ஐ-3)

# சைவ சமயப் பரீட்சை முடிவுகள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைக் காரியதரிசி சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

இம்முறை யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 360 பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை இடம்பெற்றதாகவும் —

மேற்படி பரீட்சையில் ஆண்டு இரண்டு முதல் ஆண்டு 13 வரையிலான ஒவ்வோர் வகுப்பிலும் அதிஉயர் புள்ளியைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-7)

# குற்றப் பத்திரிகைகளை தமிழில் தாக்கல் செய்க

## பொலீஸாருக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

எதிர்த் தரப்பினர், கட்சிக்காரர்கள் உட்பட வழக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் தமிழர்களாக இருப்பதால் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் போது அவற்றை தமிழில் தாக்கல் செய்ய வேண்டும் என்று மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் க. அரியநாயகம் பொலீஸாருக்கு பணிப்புரை வழங்கினார்.

பண்டத்தரிப்பு பனிப்புலத்தில் இடம் பெற்ற வெற்றிலைத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் தொடர்பான குற்றப் பத்திரிகையை இளவாலைப் பொலீஸார் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் சிங்கள மொழியில் சமர்ப்பித்ததையடுத்தே பதில் நீதிவான் மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

மேற்படி திருட்டுத் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த ராஜரத்தினம் திருச்செல்வம், பொன்னுத்துரை பொன்ராசன் ஆகியோருக்கு நீதிவான் தலா 150 ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

(ஐ-5)

# நெடுந்தீவு விஜயம்

நெடுந்தீவு, ஜன. 28

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் நேற்று புதன்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்து நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள் உட்பட பொதுமக்களைச் சந்தித்து அத்தியாவசியப் பிரச்சினைகள் குறித்துக்கலந்துரையாடினார்.

(ஐ-111)

# 'பக்ஸ்'சேவை தபாலகம் ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். குடாநாட்டில் இருந்து பொதுமக்கள் வெளியிடங்களுக்கு அவசர செய்திகளை ''பக்ஸ்'' மூலம் அனுப்பி வைக்க வசதியாக புதிய சேவை ஒன்றை நடத்த யாழ். பிரதம தபாலகம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாத முற்பகுதி தொடக்கம் மேற்படி சேவையை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

# முன்பள்ளிக் கலைவிழா

வடமராட்சி, ஜன. 28

உடுப்பிட்டி நாவலடியில் பாலர் முன்பள்ளியில் நாளை வெள்ளிக்கிழமை கலைவிழா நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் மாணவிகளின் சிந்து நடையிலான காத்தவராயன் நாடகமும் மாணவர்களின் மின்னல் கொடி என்னும் சரித்திர நாடகமும் இடம்பெறும். அத்துடன் நாடக இயக்குனர்களான கி. தவராசா, சி. விஜயகுமார் ஆகியோரும் இவ் விழாவில் வைத்துக் கௌரவிக்கப்படுவார்கள்.

(ஐ-173)

# சதீஸின் கொலையைக் கண்டித்து புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28

புளொட் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சதீஸ் (தில்லைநாதன் சந்திரமோகன்) சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து புளொட் அமைப்பின் தலைமையகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தோழர் சதீஸ் (தில்லைநாதன் சந்திரமோகன்) அவர்கள் கடந்த 24 - 01 - 99 இரவு 7. 40 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்து புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் படுகொலைசெய்யப்பட்டார்.

தோழர் சதீஸ் அவர்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்து இந்த உயர்ந்த உண்மையான இலட்சியத்திற்காகத் தம்மை 1984 ஆம் ஆண்டு கழகத்தினில் இணைத்துக் கொண்டவர். மக்களை ஸ்தாபனமயப்படுத்தி அரசியல் ரீதியாக புரட்சிப் பாதையில் தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லும் போது தன்னிச்சைப் போக்குள்ள எதிர்ப் புரட்சிவாதிகளாகிய பாசிச சக்தியினால் போராடும் உரிமை மறுக்கப்பட்டு, சகோதரப் படுகொலைகள் மூலம் வீரம் செறிந்த தமிழர் விடுதலைப் போராட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டு, சிதைந்த போதிலும் உறுதி தளராமல் முன்னின்று உழைத்தவர். தொடர்ச்சியான பேரழிவுகளைச் சந்தித்து வரும் எமது மக்களையும் திட்டமிட்ட குடியேற்றத்தினால் பறிபோகும் எல்லைப் பிரதேசங்களையும் பாதுகாக்க வன்னியின் நுழைவாயிலான நொச்சிமோட்டையில் 1997 ஆம் ஆண்டு வரை நின்று அயராது உழைத்தவர்.

1997 ஜனவரியில் கழகத்தின் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டபோது குடாநாட்டில் இயக்கங்களுக்கு இடையேயான ஐக்கியத்திற்காக முழுமூச்சாக நின்று செயற்பட்டவர். விடுதலைப்புலிகள் இயக்கத்துடனும் மென்மையான போக்கினைக் கடைப்பிடித்தவர்.

யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் தூபி அமைத்தல், மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட சகல சிரமதானங்களிலும் தலைமை வகித்து இவ்விடயங்களனைத்திற்கும் முக்கிய காரண கர்த்தாவாகத் திகழ்ந்த இவர் மண்ணையும், மக்களையும் மீட்பதற்காகப் போராடுகின்றோம் எனக் கூறிக் கொள்ளும் பாசிசப் புலிகளின் வெறியாட்டத்திற்கு இரையானார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நல்ல கருத்துக்களையும் மனித நேயமிகு உள்ளங்களையும் துப்பாக்கித் துரைத்தனத்தால் என்றும் வெல்ல முடியாது: இதனை இனியாவது பாசிச சக்திகள் [illegible] தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38 கிராமசேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். மாவட்டத்தில் 38 கிராமசேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியேறுவதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களினால் இப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 30 கிராம சேவையாளர் பிரிவுகளும் சங்கானையில் இரு பிரிவுகளும் சண்டிலிப்பாயில் நான்கு பிரிவுகளும் நல்லூரில் இரு பிரிவுகளும் மக்கள் செல்ல முடியாத பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையினால் மேற்படி பகுதிகளில் வசிக்கக்கூடிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மாவட்டத்தில் பல பகுதிகளிலுமுள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்து பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-5)

## மண்வெட்டிப் பிடிகள்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். விவசாயிகளின் தேவைக்கென 6 ஆயிரம் மண்வெட்டிப் பிடிகள் கமநல சேவை நிலையத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இந்த மண்வெட்டிப் பிடிகள் கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக ஒரு பிடி 90 ரூபா வீதம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

(இ-5)

## விவேகானந்தர் பிறந்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 28

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை ஒட்டிய நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபர் திருமதி நா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா 'வீர இளைஞருக்கு' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

அன்று மாலை 5 மணிக்கு பருத்தித்துறை இலங்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)


## இதய அஞ்சலி

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் பிரதம குருவும்
எமது இல்லத்தின் வழிகாட்டியுமாக இருந்து
எங்களை நல்வழிப்படுத்திய

**சாம் அண்ணா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**அருளகம் பெண்கள் இல்ல நிர்வாகக்குழுவும், பிள்ளைகளும்**

மருதனார்மடம்,
சுன்னாகம். (62544)

## கண்ணீர் அஞ்சலி

நெல்லியடி நெல்லைக் குமரன் றேடேர்ஸ்
உரிமையாளரும்
வாணிபர் கழக பொருளாளருமாகிய

**திரு. சி. அகிலதாஸ்**

அவர்களது மனைவியின் தாயார்

திருமதி
**கிருஷ்ணசாமி பரமேஸ்வரி**

அவர்கள் காலமாகியதை அறிந்து நெல்லியடி வர்த்தகர்கள் தமது ஆழ்ந்த கவலையை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நெல்லியடி
வாணிபர் கழகம்.

(சி/6295)

## ராஜா

யாழ்ப்பாணம்.

பிரபு, சுகன்யா, விசு
நடித்த
சின்ன மாப்ளே

இன்று காட்சிகள்
10-30, 2-00, 5-00

[சி/6246]

## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.

இன்று
ரஜனி, மீனா, ரோஜா
நடித்த
**வீரா**
(ரீல்ஸ்)

காட்சிகள்: 10-30, 2-30

(62433)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

இன்று முதல்
விஜய், டிம்பிள்
நடித்த
காலமெல்லாம்
காத்திருப்பேன்

காட்சிகள்;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P. No. 070—212223

(62429)

# பாராட்டுகின்றோம்

## யா/அச்சுவேலி மகா வித்தியாலயம்

1998 ஒகஸ்ட் க. பொ, த. உயர்தரப் பரீட்சையில்
சிறந்த பெறுபேறு பெற்றவர்கள்

| கலைப் பிரிவு | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|
| 1. செல்வன் அ. கிரிசாந்தன் | A 2B C | 112 |
| 2. செல்வன் தி. ஜெராட் செல்வராசா | 3B C | 193 |
| 3. செல்வி த. காமினி | 2A 2C | 296 |
| 4. செல்வி பா. கோகுலராணி | A B 2C | |
| 5. செல்வி இ. குந்தவை | A 3C | |
| 6- செல்வி பா. நந்தினி | B 3C | |
| 7. செல்வன் இ. இளங்கோ | 2B 2C | |
| 8. செல்வி யோ. பகீர்த்தனா | 2B C S | |
| 9. செல்வி ம. ஜெகனி | B C 2S | |
| 10. செல்வி வி. சர்மிளா | 2B C S | |
| 11. செல்வி ப. வினோதினி | B 3C | |
| 12. செல்வி த. கௌசல்யா | B 2C S | |
| 13. செல்வன் க. ஜெகந்தன் | B 2C S | |
| 14. செல்வன் சி. சஞ்சயன் | B 3S | |
| 15. செல்வன் த. தனராஜன் | 3C S | |
| 16. செல்வி கி. அமிர்தவேணி | B C 2S | |
| 17. செல்வி ப. பத்மரூபி | 2C 2S | |
| 18. செல்வன் சி. ரமணன் | C 3S | |
| **வர்த்தகப் பிரிவு** | | |
| 1. செல்வன் இ. வசீகரன் | B 3C | |
| 2. செல்வன் ஜெ. பிரதீவ் | C 3S | |

மேற்படி மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதியைப் பெற்றிருப்பதுடன் 96 வீதமானோர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

**1998 ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்**

1. செல்வன் ஞா. செந்தூரன் — 111 புள்ளிகள்
2. செல்வி ஆர். நிசானி — 111 புள்ளிகள்
3. செல்வி ஏ. வினிதிகா — 111 புள்ளிகள்

இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும் வழிநடத்திய அதிபரையும் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

**யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்,**
**அச்சுவேலி.**

(சி/6292)


## மரண அறிவித்தல்கள்

திருமதி
### பானுமதி நல்லைநாதன்

காலஞ்சென்ற உரும்பிராய் உடையார் சுப்பிரமணியம் நல்லைநாதனின் அன்பு மனைவி பானுமதி 27. 01. 99 நேற்றுக் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 30-01-99 சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
**மீனாம்பிகை சோமநாதன்** (மகள்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

கொழும்பு முகவரி:
Mr. Sivasithamparam
18/1, Edmonton Road,
Colombo – 6
T. P - 812429

(62543)

### இராமநாதன் வடிவேலு

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமநாதன் வடிவேலு 27 - 01 - 99 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் ஓய்வு பெற்ற மருத்துவதாதி வள்ளியம்மையின் அன்புக் கணவரும் பத்மகுமாரி (ஆசிரியை) யின் அன்புத் தந்தையும் திரு. கதிரேசனின் (கிராம சேவையாளர்) மாமனாரும் தங்கேயன், பகிரதி, ஜெயந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் சுப்பிரமணியம் தியாகராசா, ஆறுமுகம், காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதியின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-01-99 இன்று பி. ப. 2 மணியளவில் நெடுந்தீவு கிழக்கிலுள்ள இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**வ. கதிரேசன்**
(கிராமசேவையாளர்)

நெடுந்தீவு. (சி/6296)

### வண. சேவக். சாம் அல்பிறட்

(சாம் அண்ணை)

மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் பிரதம சேவக். வணக்கத்துக்குரிய சாம் தேவரத்தினம் அல்பிறட் (சாம் அண்ணை) நேற்றுமுன்தினம் காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28-01-99) வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு ஆச்சிரம வளாகத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**ஆச்சிரம ஆளுகைக்குழு.**

மருதனார்மடம். (625181)

திருமதி
### நல்லம்மா சிற்றம்பலம்

சந்தாதோட்டம், புலோலி கிழக்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சிற்றம்பலம் 27-01-99 இல் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற முருகர்—கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி—லக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி சிற்றம்பலம் (காந்தி) அவர்களின் அன்பு மனைவியும் ராதாகாந்தி (கனடா), வனிதாகாந்தி, லலிதாகாந்தி, ஜெயாகாந்தி (U.S.A.), லதாகாந்தி (கனடா), பிரபாகாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் S. தில்லைநடராசா, M. அரியரத்தினம் (சிற்றிவைன் ஸ்ரோர்ஸ், SAN Trans port, SAN Trade), புஷ்பகாந்தன் (கனடா), கலா (கனடா), விக்னேஸ்வரி (U S.A.), மித்திராதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெசேன், ஒசுவா (கனடா), பிருந்தாகாந்தி, வருணகாந்தி, நிர்ஷாகாந்தி, சஞ்ஜீவ்காந்தி, சுகிர்தாகாந்தி, நிருத்திகாகாந்தி, ராசீலா, மயூரி, நிகாரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ் சென்ற சின்னம்மா, இராசையா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னுத்துரை, இராசசிங்கம், ரூபசிங்கம், துரைசிங்கம், காலஞ்சென்ற சபாபதி, இரத்தினம் (கனடா), சாந்தகுமாரி (இந்தியா), நிர்மலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-01-99) வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சி. சிற்றம்பலம்** (காந்தி—கணவர்)
**மா. அரியரத்தினம் SAN**—மருமகன்)

சந்தாதோட்டம்,
புலோலி. (625481)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான

## சான்றிதழ் வழங்கல்

எதிர்வரும் 5 ஆம் திகதி [ வெள்ளிக்கிழமை ] நடைபெறவிருக்கும் எமது நிறுவன தினத்தில் 98/99 கல்வியாண்டில் தமது பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன. எனவே 98 ஆம் ஆண்டு தமது பயிற்சி நெறிகளைப்பூர்த்தி செய்த மாணவர்கள் மட்டும் 02 - 02 - 99 க்கு முன்பதாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:
99 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமது பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி [புதன்கிழமை] 2-30 மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம். அனைவரும் தவறாமல் சமுகம் தரவும்.

★ நெல்லியடி கிளை நிறுவன மாணவர்கள் நெல்லியடி கிளை அலுவலகத்தில் இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

- DIRECTOR
I. I. S., JAFFNA.
[சி/6291]


## வடமராட்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)
துறை பஸ் நிலையம் ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை 6 மணி முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.
(இ-6-15-173)

## புறக்கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்டது.

அந்தக் குண்டு தொடர்பான தகவலைப் பொலீஸாருக்கு வழங்கிய இரு பொது மக்கள் பொலீஸ் தலைமையகத்தில் வைத்து சன்மானம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)


எமது இன்றைய வெளியீடு!

- சூரிய பார்வை
- கொமாண்டர் சூர்யா
- கல்கத்தா

**விஷ்ணு வீடியோ**
துரை வீதி,
கோண்டாவில்.
(62545)

எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு!

அர்ஜுன் - பூஜா
நடித்த
சூரியப் பார்வை
[ பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம். ]

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
[சி/6293]


# சிகிச்சை பெறும் ஒருவருக்கு

# பாதுகாப்பு வழங்குமாறு படையினரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழ்க்குழு ஒன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது தனக்குத்தானே தீ மூட்டிக் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் தற்பொழுது சிகிச்சை பெற்று வரும் நபருக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அதிகாரி எஸ். சிறீதரன் பாதுகாப்பு படை அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அவரை நேரில் பார்வையிட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி எஸ். சிறீதரன் அவரிடம் இருந்து வாக்குமூலம் எடுக்க முயற்சித்தார்.

நோய் வேதனை காரணமாக அவரால் வாக்கு மூலம் அளிக்கமுடியவில்லை என்று சிறீதரன் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற நிலையில் அவர் சிகிச்சை பெற்று வருவதால் அவருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று சிறீதரன் படை அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

(இ-3-5)

## தனது...

(முதலாம் பக்கத் தொடர்)
வது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருமதி சறோஜினிதேவி யோகேஸ்வரன், எஸ். சிவபாலன், எஸ். மதிமுகராசா ஆகியோரை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்றனர். ஆனால் விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லி தமிழர் விடுதலைக் கூட்டணி அந்தச் சம்பவங்களைக் கண்டிக்கவில்லை.

அதன் பின்னர் ரெலோ அமைப்பைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் அந்த அமைப்பு அமைதியாக இருந்து விட்டது.

தற்போது விடுதலைப் புலிகள் புளொட் உறுப்பினரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். நாம் அமைதியாகவோ வாளாவோ இருக்கப் போவதில்லை.

எம்மைப் பாதுகாக்கத்தக்க வகையில் பதில் நடவடிக்கை எடுப்போம். அந்தப் பதில் நடவடிக்கையை ஆரம்பித்து விட்டோம்.

எமது நடவடிக்கைகளின் முக்கியத்துவம் கருதி இப்போதைக்கு அது தொடர்பான விவரங்களை வெளியிட முடியாதுள்ளது.

விடுதலைப் புலிகளின்முதல் இலக்கு எமது மாவட்டப் பொறுப்பாளர் எஸ். கிருபைராஜாதான். அது தொடர்பான உளவுத் தகவல்கள் எமக்குக் கிடைத்திருந்தன. அதன்படி அவருக்கு தகுந்த பாதுகாப்பை நாம் வழங்கி இருந்தோம்.

கொல்லப்பட்ட சதீஸ் தமக்கு விடுதலைப் புலிகள் எதுவும் செய்யமாட்டார்கள் என்ற அதீத நம்பிக்கையில் செயற்பட்டதாலும் சம்பவம் நடந்த சமயம் தனது பாதுகாப்பு விடயத்தில் கவனயீனமாக இருந்ததாலும் அது விடுதலைப்புலிகளுக்கு வாய்ப்பாகி விட்டது— இப்படி மாணிக்கதாசன் கூறினார்.

(இ-3)

## விவேகானந்தர்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)
வங்கிக் கிளையில் அக்கிளையின் தலைவர் எஸ். நடராஜலிங்கம் தலைமையில் விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றுத்திரைப்படம் காண்பிக்கப்படவிருக்கிறது.

(இ-3)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)
ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களே பெரும்பாலும் ஈடுபட்டனர் என்று மேற்படி கண்காணிப்புக் குழுக்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர்கள் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்தனர்.

தபால், தொலைத் தொடர்புத்தகவல்த் துறை அமைச்சர் மங்கள சமரவீர, சில இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றன என்பதை ஒத்துக் கொண்டார்.

எனினும் அவற்றை அரசாங்கம் ஆதரிக்கவில்லை என்றும்—

இது தொடர்பாக உடனடி விசாரணைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

## 5 மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்)
னர்.

இன்றில் இருந்து அடுத்த 3 மாத காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் நடக்கும் திகதி பற்றிய அறிவிப்பு அடுத்த 4 வாரங்களுக்குள் வெளியிடப்பட வேண்டும்.

அத்துடன் தபால் வாக்காளர்கள் தமது வாக்குக்களை இன்றில் இருந்து 4 வாரங்களுக்குள் செலுத்த வசதி செய்ய வேண்டும்—என்றும் தீர்ப்பில் தேர்தல்ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுதாரர்களுக்கு வழக்குச் செலவாக 30 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

(இ-10-3-6)

## வெள்ளைக்...

[முதலாம் பக்கத் தொடர்]
நேற்று முன்தினம் அதிகாலை நிகழ்ந்த மனத்தை உருக்கும் இந்தச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவில் இருந்து இடம் பெயர்ந்த மதுரைவீரன் சுப்பிரமணியம் (60 வயது) என்பவர் பல இடங்களில் தங்கி இறுதியில் மடுவில் தங்கி இருந்தார்.

'நிவாரண உதவி இல்லை, தொழில் வாய்ப்பு இல்லை. இதன் காரணமாக ஏற்பட்ட வறுமையால் உடல் சோர்ந்த நிலையில் 16, 11, 8, 6, வயதுகளை உடைய பெண் பிள்ளைகளையும், 3 வயது நிரம்பிய மகனையும் கூட்டிக் கொண்டு வெள்ளைக் கொடியை உயர்த்தியவாறு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்ல முடிவுசெய்தார்.

அவர் தங்கி இருந்த இடத்தில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசமான மடு மன்னார் வீதிக்குச் செல்ல 7 மைல் தூரம் நடக்க வேண்டும்.

அவர் தமது பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு ஆறுமைல் தூரத்தைக் கடந்துவிட்டார்.

ஆனால் அவரால் அதற்கு அப்பால் செல்ல முடியவில்லை. வழியில் மயங்கி வீழ்ந்து மரணமானார்.

பிள்ளைகள் அவரின் சடலத்தையும் தூக்கிக்கொண்டு ஒருவாறு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து இராணுவத்தினரால் மன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு தந்தையின் சடலத்தை அடக்கம் செய்த அவர்கள் தற்சமயம் தனிமரமாக வவுனியா அகதி முகாமில் தங்கியுள்ளனர்.

அவர்களின் தாயார் காய்ச்சல் காரணமாககடந்த 6 மாதத்துக்கு முன்னர் இறந்திருந்தார். [இ-3-164]

## விமானச்...

(முதலாம் பக்கத் தொடர்)
திகதி பதிவு செய்தவர்களுக்கு இன்று வியாழன் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் தமது அலுவலகத்தில் வைத்து டிக்கெட் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

டிக்கெட் பெற்றவர்கள் நாளை காலை 11 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஆரம்பத்தில் ஒரு சேவை நடத்தப்படும் என்றும்—
55 பேர் செல்ல வசதி செய்யப்படும் என்றும்—
காலக்கிரமத்தில் பயணிகளின் தேவையைப் பொறுத்து சேவை அதிகரிக்கப்படும் என்றும் — அவர் கூறினார்.

டிக்கெட் பெறுவதற்குக் கீழ்காணும் அடையாள அட்டை இலக்கம் உள்ளோரை இன்று வருமாறு கேட்கப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 651241804-V | 642141279-V | 421662690-V |
| 747391416-V | 715553066-V | 711713182-V |
| 442802661-V | 583580956-V | 531143116-V |
| 484554800-V | 520843035-V | 553631354-V |
| K0-299643 | 721999032-V | 700883280-V |
| 697672346-V | 523520202-V | 546701816-V |
| எம். கிருதியா | எம். நிர்நித்தா | 583322710-V |
| 508222874-V | 517821675-V | 693360200-V |
| 730743750-V | 682963409-V | 420740484-V |
| 512120237-V | 578553312-V | எம். திலகராஜா |
| என். வேணுகா | 410470174-V | 401731520-V |
| 433300238-V | 497572311-V | 500044012-V |
| 620722898-V | 533593100-V | 566372053-V |
| தர்சிக்கா | தர்மிக்கா | 597631944-V |
| 580480667-V | 091021806 | 553262380-V |
| 592110580-X | 752560889-V | 721011119-V |
| L0-913491 | 681110429-V | 631251943-V |
| 818441193-V | 422871250-V | 582212333-V |
| 623293246-V | 292810148-V | 700894169-V |
| 498343953-V | 816401739-V | 303011579-X |

(இ-3-15)

## ஆமர் வீதி...

(முதலாம் பக்கத் தொடர்)
நேரத்தில் சுற்றிவளைக்கப்பட்டு, கடும் சோதனைகள் இடம் பெற்றன.

ஆமர் வீதியில் அமைந்துள்ள பிரபல சைவக் கடைகளில் தங்கியிருந்த சமையல்காரர் முதல் ஊழியர்கள் வரை கைது செய்யப்பட்டதால் அக்கடைகள் நேற்றுத் திறக்கப்படவில்லை.

## காவலரண்களை...

(முதலாம் பக்கத் தொடர்)
ஜெகன் பிரிகேடியர் மாரம்பேயுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளையடுத்து இதற்கான நடவடிக்கைகளை அவர் எடுத்துள்ளார்.

காவலரண் பகுதியில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றி, புல்டோசர் மூலம் காவலரண்களை அகற்ற அவர் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தப் பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் குழு ஒன்று நேற்று அங்கு சென்றிருந்தது. (இ-3)


# சிவநெறி கல்வி நிலையம்

( ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில் )

## A/L 2000, 2001

## கணிதவிஞ்ஞானவகுப்புகள்

பௌதிகவியல் — திரு. பெல்ஸ்மன்
இரசாயனவியல் — திரு. அன்பழகன்
உயிரியல் — திரு. அல்போன்ஸ்
இணைந்த கணிதம் — திரு. சிவலோகநாதன்

ஆரம்பம்: 29 - 01 - 99 வெள்ளி பி. ப. 5 மணி

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பெறவும்.

[சி/6282]

# வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதான கடற்கரை வீதி, வியாபாரிமூலைச் சந்திக்குப் பக்கத்தில் (பஸ் இல. 751) 'கமல வாசம்' என்ற பெயருடைய பிரயோசனமுள்ள தென்னைமரங்கள் கொண்ட நாலு பக்கமும் மதிலுடைய, எல்லா வசதிகளும் உடைய 9 பரப்பு விசாலமான வீடு விற்பனைக்கு உண்டு. மீன்வள உற்பத்தியாளருக்கு உகந்தது. போக்குவரத்து, மின்வசதிகொண்டது. கூடிய கூறுவிலை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். தரகர் தேவையில்லை. நேரில் தொடர்புகொள்ளலாம்.

பார்வையிடும் நேரம்:-
11.00 - 2.00 2.00 - 5.00

து. செல்லக்கண்டு
'கமல வாசம்'
இம்பருட்டி,
வியாபாரிமூலை.

(சி/6272)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org